ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2075/21 - 2018 ජූනි මස 12 වැනි අඟහරුවාදා - 2018.06.12

*2075/21 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு யூன் மாதம் 12 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்**

அறிவித்தல்

**சில்லறை, மொத்த விற்பனைத் தொழில்**

(136 ஆம் அத்தியாயமான) சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 28 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க சில்லறை, மொத்த விற்பனைத் தொழிலுக்கான சம்பளச் சபையானது, அக்கட்டளைச் சட்டத்தின் 30 ஆம் பிரிவினால் அதற்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக் கொண்டு, இதற்கான அட்டவணையில் தரப்பட்டுள்ள தீர்மானங்களைச் செய்வதற்கு அதற்குள்ள உத்தேசம் பற்றி இத்தால் அறிவிக்கின்றது.

உத்தேசத் தீர்மானங்களுக்கான ஆட்சேபனைகள் சபைத் தலைவரினால் 2018 ஆம் ஆண்டு யூலை மாதம் 02 ஆந் திகதியன்று நண்பகல் 12.00 மணிவரை பெற்றுக்கொள்ளப்படும்.

அத்தகைய ஆட்சேபனை ஒவ்வொன்றும் எழுத்தில் செய்யப்படுதலும், அத்தகைய ஆட்சேபனை எந்த ஏதுக்களின் மீது செய்யப்படுகின்றதோ அந்த ஏதுக்கள் பற்றிய கூற்றொன்றைக் கொண்டிருத்தலும் வேண்டும்.

ஏ. விமலவீர,<br>
தலைவர்,<br>
சில்லறை, மொத்த விற்பனைத் தொழிலுக்கான<br>
சம்பளச் சபை.

தொழில் திணைக்களம்,<br>
கொழும்பு 05,<br>
2018, யூன் 12.

1A - G 27850 — 17 (2018/06)

இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

**அட்டவணை**

சில்லறை, மொத்த விற்பனைத் தொழிலுக்கான சம்பளச் சபையினால் ஆக்கப்பட்டு 1990 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 28 ஆந் திகதிய 599/12 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ள அறிவித்தலினகத்தேயுள்ள அட்டவணையில் விரிவாகக் குறித்துரைக்கப்பட்டுள்ளதும், காலத்திற்குக் காலம் மாற்றப்பட்டுள்ளதும், கடைசியாக 2012 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 18 ஆந் திகதிய 1789/19 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள அறிவித்தலின் மூலம் மாற்றப்பட்டவையுமான தீர்மானங்கள் அவ்வட்டவணையின் பகுதி II இற்கு பதிலாகப் பின்வரும் புதிய பகுதியை பிரதியீடு செய்வதன் மூலம் மேலும் வேறுபடுத்தப்பட வேண்டும்.

*பாகம் II*

**மாதமொன்றுக்கான ஆகக்குறைந்த சம்பள வீதம்**

*நிரல் I*

**வேலையாளரின் வகுப்பு :**

| | |
|---|---|
| தரம் I | பண்டகசாலைப் பொறுப்பாளர், கணக்குப் பதியுனர்கள், முகாமையாளர்கள், சுருக்கெழுத்தாளர்கள், மருந்தாளர்கள். |
| தரம் II | தொலைபேசி இயக்குநர்கள், எழுதுவினைஞர்கள், தட்டெழுத்தாளர்கள், பேரேட்டு எழுதுவினைஞர்கள், கணக்கு எழுதுவினைஞர்கள், உதவிக் காசாளர்கள், செலவுக் கணக்கு எழுதுவினைஞர்கள், சம்பள எழுதுவினைஞர்கள், காசு இயந்திர இயக்குநர்கள், பற்றுச்சீட்டு எழுதுவினைஞர்கள். |
| தரம் III | பற்றுச்சீட்டு சேகரிப்போர், ஆண் விற்பனையாளர், பெண் விற்பனையாளர், செவ்வை பார்ப்போர். |
| தரம் IV | தொழிலாளர்கள், ஒப்படைப்பாளர்கள், கடைச் சிப்பந்திகள், பொதியிடுவோர்கள், செய்திப் பணியாளர்கள், கருமபீடப் பணியாளர்கள், மருந்துக் கலவையாளர்கள், ஏற்றி இறக்கும் தொழிலாளர்கள், பம்பிங் கவனிப்பாளர்கள், துவிச்சக்கரப் பணியாளர்கள். |

*நிரல் II*

**மாதமொன்றுக்கான ஆகக்குறைந்த சம்பள வீதம்**

**ஊழியர்களின் வகுப்பு**

| ஊழிய ஆண்டு | தரம் I<br>ரூ. ச. | தரம் II<br>ரூ. ச. | தரம் III<br>ரூ. ச. | தரம் IV<br>ரூ. ச. |
|---|---|---|---|---|
| 1 ஆம் ஆண்டு | 13,580.00 | 12,876.00 | 12,179.00 | 11,500.00 |
| 2 ஆம் ஆண்டு | 13,755.00 | 13,026.00 | 12,304.00 | 11,600.00 |
| 3 ஆம் ஆண்டு | 13,930.00 | 13,176.00 | 12,429.00 | 11,700.00 |
| 4 ஆம் ஆண்டு | 14,105.00 | 13,326.00 | 12,554.00 | 11,800.00 |
| 5 ஆம் ஆண்டு | 14,280.00 | 13,476.00 | 12,679.00 | 11,900.00 |
| 6 ஆம் ஆண்டு | 14,455.00 | 13,626.00 | 12,804.00 | |
| 7 ஆம் ஆண்டு | 14,630.00 | 13,776.00 | 12,929.00 | |
| 8 ஆம் ஆண்டு | 14,805.00 | 13,926.00 | 13,054.00 | |
| 9 ஆம் ஆண்டு | 14,980.00 | 14,076.00 | 13,179.00 | |
| 10 ஆம் ஆண்டு | 15,155.00 | 14,226.00 | 13,304.00 | |

06-982

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.